**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI**

**M.C.O.P. No.1730/2021**

**P.W.3**

Deposition of Witness for the Petitioner / Respondent Solemnly affirmed by of this Court on **13.12.2024** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | | | |
|---|---|---|---|
| Name | அருண்குமார் | Father Name : | முருகேசன் |
| Village : | | Taluk : | |
| Caste : | | Religion : | |
| Calling : | | Age : | 28 |

**<u>மனுதாரர் தரப்பு முதல் விசாரணை :</u>**

நான் மனுதாரர் தரப்பு 3 வது சாட்சி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். P.V.K.டிம்பர் டிரேடிங் நிறுவனத்திலிருந்து எனக்கு வழங்கப்பட்ட அனுமதி கடிதம் அசல் **சா.சா.ஆ.1** ஆகும். என்னுடைய ஆதார் கார்டு நகல் **சா.சா.ஆ.2** ஆகும்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

நான் மேற்படி நிறுவனத்தில் 6 வருட காலமாக மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு விபத்தில் இறந்த குபேந்திரன் மற்றும் விபத்தில் காயமடைந்த மாரிக்கண்ணன் ஆகியோர்களை தெரியும். அவர்கள் இருவரும் எங்கள் நிறுவனத்தில் மாத சம்பளம் பெற்று பணியாற்றி வந்தார்கள். அந்த மாத சம்பளத்தை நாங்கள் ரொக்கமாக நேரடியாக கையில் கொடுத்துவிடுவோம். எங்களிடம் வேலை செய்பவர்களுக்கு அவர்களுடைய வங்கி கணக்கில் சம்பளம் போடும் பழக்கம் இல்லை. எங்கள் நிறுவனத்தில் இறந்து போன குபேந்திரன் பெரிய ஆசாரியாக வேலை பார்த்தார். மேலும் மாரிக்கண்ணன் எங்கள் நிறுவனத்தில் தொழிலாளியாக வேலை பார்த்தார். எங்கள் நிறுவனத்தில் மொத்தம் சுமார் 40 பேர் வேலை பார்த்தார்கள். அந்த வேலை பார்க்கும் நபர்களுக்கு சம்பளம் கொடுப்பது சம்பந்தமாக எங்கள் நிறுவனத்தில் கணக்கு உள்ளது. அந்த கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

மனுதாரர்களுக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்தில் ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.13 ஆவணங்களை உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களில் கையொப்பம் செய்த நபர் எங்கள் நிறுவனத்தில் தற்சமயம் பணிபுரியவில்லை. ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.13 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளது போல் இறந்த நபருக்கும் மனுதாரர் மாரிக்கண்ணனுக்கும் சம்பளம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.